








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 10.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- விருதுகள்







# இந்திய நிகழ்வுகள்

- நகர்புற மேம்பாட்டுக்கான திட்டங்களை நிலையாக செயல்படுத்தவும், கார்பன் மோனாக்ஸைடு போன்ற பசுமை இல்ல வாயுவை குறைப்பதையும் நோக்கமாகக் கொண்ட **“MOBILIZE YOUR CITY” (MYC)** மீது **இந்தியா மற்றும் பிரான்ஸ்** நாடுகளுக்கிடையே உடன்படிக்கை ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
  - இவ்வுடன்படிக்கை, உள்ளூர் மட்டத்தில் நகர்புற திட்டங்களை செயல்படுத்துவதில் உதவுவதோடு, தேசிய அளவிலான இந்தியாவின் நிலையான போக்குவரத்து கொள்கையை மேம்படுத்துவதற்கு உதவும்.

- நாடு முழுவதிலும் உள்ள வனம் மற்றும் மலைப்பகுதிகளுக்கு அருகே அமைக்கப்பட்டுள்ள ரயில்வே தண்டவாளங்களை அப்பகுதியில் வசிக்கும் யானை கூட்டங்கள் கடந்து செல்லும் போது, அவை அடிபட்டு இறப்பதை தடுக்க ரயில்வே துறையானது **“Plan Bee”** என்னும் திட்டத்தை தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இரயில்கள் தண்டவாளங்களில் செல்லும் போது தேனீக்கள் போல சத்தம் எழுப்பும் ஒலிப் பெருக்கிகளை தண்டவாளத்தின் அருகே இணைக்க உள்ளது.

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்(Cabinet Committee on Economic Affairs) குழு, 12வது ஐந்தாண்டு திட்டக் காலத்தையும் தாண்டி 2017-18 முதல் 2019-20 வரையில் மத்திய அரசு ஆதரவு பெற்ற சிறப்புத் திட்டமான வனவுயிர் வாழ்விடங்களுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் (Integrated Development of Wildlife Habitats) திட்டத்தை தொடர்ந்து செயல்பட ஒப்புதலளித்துள்ளது.
  - இத்திட்டம் மத்திய அரசின் ஆதரவுத் திட்டமான புராஜெக்ட் டைகர், புராஜெக்ட் எலிபெண்ட் மற்றும் வனவுயிர் வாழ்விட மேம்பாடு ஆகியவைகளை உள்ளடக்கியது.

# உலக நிகழ்வுகள்

- துருக்கியில் உள்ள இஜ்மிர் நகரில் நடைபெற்ற “87வது இஜ்மீர் சர்வதேச வர்த்தக கண்காட்சியில்” 87 th **Izmir International Fair 2018** இந்தியா சார்பில் “மூல இந்தியா” என்ற பெயரில் ஒரு மெகா வணிக கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது.
  - இந்த **“மூல இந்தியா”** Source India’ துருக்கியிலும் ஏனைய அண்டை நாடுகளிலும் இந்தியாவின் ஏற்றுமதிகளை உயர்த்தவும் பயன்படும்.

- சுற்றுச்சூழலில் பிளாஸ்டிக் பைகளால் கேடு விளைவதை தடுக்கும் வகையில், தண்ணீரில் கரையும் பிரத்யேக பையை சீன விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.
  - தண்ணீரில் கரையும் இந்த பை **மக்காச்சோளம்** போன்றவற்றின் மாவில் இருந்து தயாரிக்கப்படுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

We Shine Academy™

# விளையாட்டு நிகழ்வுகள்

- அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற, **கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ்** போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில், மகளிர் ஒற்றையர் பிரிவில், செரினா வில்லியம்சை வீழ்த்தி ஜப்பான் வீராங்கனை **நவோமி ஒசாகா Naomi Osaka** சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை ஒசாகா வெல்வது இதுவே முதன்முறையாகும்.
  - ஆடவர் ஒற்றையர் பிரிவில் **நோவக் கோவிச்** சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- விஞ்ஞானிகள், தகவல் பத்திரிக்கையாளர்கள் மற்றும் மற்றவர்கள்

தங்கள் பணிக்காக தேவைப்படும் தகவல்களை பெற உதவிடும் வகையில் பலதரப்பட்ட மொழிகளில் இயங்கி தகவல்களை கொடுக்கும் **Dataset Search** என்ற புதிய தேடல் இயந்திரத்தை கூகுள் ஆரம்பித்துள்ளது.

## விருதுகள்

- ஒடியா மொழி இலக்கியங்களை அங்கீகரிக்கவும், அதன் புகழை உலகறியச் செய்யும் கவிஞர்களுக்கு வழங்கப்படும், 39வது "சரளா புரஷ்கார் விருது – 2018" Sarala Puraskar Award -2018 ஒடிசா கவிஞர் ஸ்ரீ சத்ருநா பாண்டாவிற்கு Satrughna Pandav வழங்கப்பட்டுள்ளது.
    - அவரது கவிதை தொகுப்பான "மிஸ்ரா துருபத்" Misra Dhrupad க்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

We Shine Academy TM